بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 09/06/2023 அன்று U.K. - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**பத்ர் யுத்தம், ஆரம்பத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாமே பங்கேற்ற படைப் பிரிவுகள் மற்றும் அன்னார் அனுப்பி வைத்த படைப் பிரிவுகள் ஆகியவை தொடர்பாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு மற்றும் வரலாற்றுச் சம்பவங்கள் குறித்த ஈமானுக்கு வலுவூட்டும் குறிப்பு**

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

ஹிஜ்ரத்துக்குப் பிறகிருந்த ஆரம்ப நிலைமைகள், பத்ர் யுத்தத்திற்கான காரணிகள், மக்கத்து காஃபிர்களின் நடவடிக்கைகள் மற்றும் அவர்களின் திட்டங்களைத் தடுத்து நிறுத்துவதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் ஆகியவை பற்றி சிறிது கூறப்பட்டிருந்தது.

இப்போது பத்ர் யுத்தத்திற்கு முன், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அனுப்பி வைத்த சில படைப் பிரிவுகள், அன்னார் தாமே தலைமை தாங்கிச் சென்ற படைப் பிரிவுகள் மற்றும் மக்கத்து காஃபிர்கள் போருக்காக செய்த ஆயத்தங்களின் சில நிலைமைகள் ஆகியவற்றைக் குறித்து எடுத்துரைப்பேன். இன் ஷா அல்லாஹ்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரீ ஒன்றாம் ஆண்டு, ரமலான் மாதத்தில், **ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் தலைமையில் முதல் படைப் பிரிவை அனுப்பி வைத்தார்கள்.** இது 'ஸைஃபுல் பஹ்ர்' என்றும் அழைக்கப்படுகிறது. இதன் கொடி வெள்ளை நிறத்தில் இருந்தது. ஹஸ்ரத் அபூமர்ஸத் (ரலி) அவர்கள் இந்தக் கொடியை ஏந்தியிருந்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தம் தந்தையின் சகோதரர் ஹஸ்ரத் ஹம்ஸா பின் அப்தில் முத்தலிப் (ரலி) அவர்களை இதற்குத் தலைவராக நியமித்தார்கள். முஹாஜிர் சவாரி வீரர்கள் முப்பது பேர் அவர்களுடன் இருந்தார்கள். இவர்கள் 'அய்ஸ்' எனும் இடத்தில் அபூஜஹ்லின் தலைமையில் சிரியாவில் இருந்து வந்து கொண்டிருந்த ஒரு பயணக் குழுவை எதிர்கொண்டார்கள். இரு பிரிவினரும் அணிவகுத்து நின்றார்கள். ஆனால், 'ஜுஹைனா' கோத்திரத்தின் ஒரு தலைவர் சமரசம் செய்துவைத்து விட்டார். இரு பிரிவினரும் திரும்பிச் சென்று விட்டனர்.

அடுத்து, **ஹஸ்ரத் உபைதா பின் ஹாரிஸ் (ரலி) அவர்களின் படைப் பிரிவு** ஆகும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், ஷவ்வால் மாதம் ஹிஜ்ரீ ஒன்றாம் ஆண்டு, ஹஸ்ரத் உபைதா பின் ஹாரிஸ் (ரலி) அவர்களை 60 முஹாஜிர்களின் தலைவராக நியமித்து 'ஸனிய்யத்துல் மரா' எனும் இடத்துக்கு அனுப்பி வைத்தார்கள்.

அங்கு அவர்கள் அபூஸுஃப்யானையும் அவருடைய 200 சவாரி வீரர்களையும் எதிர்கொண்டார்கள். இரு தரப்பிலிருந்தும் அம்புகள் எய்யப்பட்டன. ஆயினும், முறையாகப் போர் நடக்கவில்லை. இதற்குமுன், முஸ்லிம்களுக்கும் இணைவைப்பாளர்களுக்கும் இடையே அம்பு எய்தல் நடைபெற்றிருக்கவில்லை. முஸ்லிம்கள் தரப்பிலிருந்து ஹஸ்ரத் சஃது பின் அபீவக்காஸ் (ரலி) அவர்கள் முதல் அம்பை எய்தார்கள். இது இஸ்லாமிய வரலாற்றின் முதல் அம்பு ஆகும். இதுகுறித்து ஹஸ்ரத் சஃது (ரலி) அவர்கள் சரியாகப் பெருமிதம் கொண்டார்கள். பிறகு, இரு பிரிவினரும் தத்தமது பகுதிகளுக்குத் திரும்பிச் சென்று விட்டார்கள்.

அடுத்து, **ஹஸ்ரத் சஃது பின் அபீவக்காஸ் (ரலி) அவர்களின் படைப் பிரிவு** ஆகும். இது ஹிஜ்ரீ ஒன்று அல்லது இரண்டாம் ஆண்டு அனுப்பப்பட்டது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் குறைஷிகளின் ஒரு வணிகக் குழுவைத் தடுத்து நிறுத்துவதற்காக, ஹஸ்ரத் சஃது பின் அபீவக்காஸ் (ரலி) அவர்களை 20 பேருக்குத் தலைவராக நியமித்து அனுப்பி வைத்தார்கள். அவர்களுக்கு, 'கரார் என்ற இடத்தைத் தாண்டிச் செல்லக்கூடாது' என்று கட்டளையும் இட்டிருந்தார்கள். ஆனால், இவர்கள் 'கரார்' எனும் இடத்தை அடைந்தபோது, அந்த வணிகக் குழு இவர்கள் சென்று சேர்வதற்கு முன்னரே சென்று விட்டிருந்தது. எனவே, இவர்கள் எவ்வித சண்டையிமின்றி திரும்பி வந்து விட்டார்கள்.

அடுத்து, **ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தலைமையில் சென்ற வத்தான் படைப் பிரிவு** ஆகும். இது ஸஃபர் மாதம், ஹிஜ்ரீ இரண்டாம் ஆண்டு சென்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் 60, 70 முஹாஜிர்களுடன் 'வத்தான்' எனும் இடத்தை நோக்கிச் சென்றார்கள். **வரலாற்று ஆசிரியரான இப்னு சஃது அவர்களின் பார்வையில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாமே கலந்து கொண்ட முதல் படைப் பிரிவு இதுவே ஆகும்.**

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மதீனாவில் தம் பிரதிநிதியாக ஹஸ்ரத் சஃது பின் உபாதா (ரலி) அவர்களை நியமித்தார்கள். குறைஷிகளின் வியாபாரக் குழுவைத் தடுத்து நிறுத்துவதே அன்னாரின் நோக்கமாக இருந்தது. ஆனால், அன்னார் சென்றடைவதற்கு முன்னாலேயே அது போய் விட்டிருந்தது. அர் 'ஸம்ரா' கோத்திரத்தின் தலைவர் மக் ஷீ பின் அம்ர் ஸமரீயுடன் சமரச உடன்படிக்கை செய்தார்கள். அதன்படி, 'இரு பிரிவினரும் ஒருவர் மற்றவர் மீது தாக்குதல் தொடுக்கவும் கூடாது. எந்தப் பிரிவின் எதிரிக்கும் உதவியும் புரியக் கூடாது.' இந்தப் பயணத்தில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பதினைந்து நாள்கள் வரை மதீனாவில் இருந்து வெளியே இருந்தார்கள்.

அடுத்து, **ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தலைமையில் சென்ற பவாத் படைப் பிரிவு** ஆகும். இது ஹிஜ்ரீ இரண்டாம் ஆண்டு ரபிய்யுல் அவ்வல் மாதத்தில் சென்றது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் சஃது பின் முஆஸ் (ரலி) அவர்களை மதீனாவின் தலைவராக நியமித்தார்கள். பிறகு, தம் இரு சஹாபாவுடன் குறைஷிகளின் வணிகக் குழுவைத் தடுத்து நிறுத்த புறப்பட்டார்கள். இந்த வணிகக் குழுவில் உமய்யா பின் கல்ஃப் மற்றும் இதர குறைஷியர்கள் 100 பேர் இருந்தனர். 2500 ஒட்டகங்கள் இருந்தன. பவாத் சென்றடைந்ததும் அன்னார் யாரையும் எதிர்கொள்ளவில்லை. எனவே, அன்னார் மதீனாவுக்குத் திரும்பி

வந்தார்கள். இதன் கொடியின் நிறம் வெள்ளையாக இருந்தது. அதை ஹஸ்ரத் சஃது பின் அபீவக்காஸ் (ரலி) அவர்கள் ஏந்தியிருந்தார்கள்.

அடுத்து, **ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தலைமையில் சென்ற உஷைரா படைப் பிரிவு** ஆகும். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு, 'குறைஷிகளின் ஒரு வியாபாரக் குழு மக்காவிலிருந்து புறப்பட்டுள்ளது என்றும், மக்கத்தினர் அதில் ஈட்டும் லாபத்தை முஸ்லிம்களுக்கு எதிராகப் போரில் பயன்படுத்தலாம் என்று எண்ணி, தமது வியாபாரத் தொகை முழுவதையும் அந்த வியபாரக் குழுவில் முதலீடு செய்துவிட்டார்கள்' என்றும் தகவல் கிடைத்திருந்தது.

எனவே, ஹுஸூர் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரீ 2 ஆம் ஆண்டு ஜமாதில் ஊலா மாதத்தில் அல்லது ஓர் அறிவிப்புப்படி, ஜமாதிஸ் ஸானீ மாதத்தில் 150, 200 பேருடன் பயணம் மேற்கொண்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உஷைராவைச் சென்றடைந்த போது, அந்த வியாபாரக் குழு சில நாள்களுக்கு முன்பே சென்றுவிட்டிருந்தது தெரிய வந்தது. இது மக்கத்து குறைஷியர்களின் அதே வியாபாரக் குழுதான்; இது சிரியாவிலிருந்து திரும்பி வந்தபோதுதான் இதை விரட்டிப் பிடிப்பதற்காக ஹுஸூர் (ஸல்) அவர்கள் மீண்டும் புறப்பட்டார்கள். மேலும், பத்ர் யுத்தம் ஏற்பட்டது.

அடுத்து, **முதல் பத்ர் யுத்தம்.** ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உஷைரா படைப் பிரிவிலிருந்து திரும்பிவந்து 10 நாள்கள் கூட ஆகியிருக்காது. அதற்குள் குர்ஸ் பின் ஜாபிர் மதீனாவின் மேய்ச்சல் நிலத்தின் மீது தாக்குதல் தொடுத்து விட்டான். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவனை விரட்டிப் பிடிப்பதற்குச் சென்றார்கள். ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களைத் தம் பிரதிநிதியாக நியமித்தார்கள். ஹுஸூர் (ஸல்) அவர்கள் ஸஃப்வான் எனும் இடத்தை அடைந்தார்கள். ஆனால், குர்ஸ் பின் ஜாபிர் வேகமாக முன்னால் சென்று விட்டான். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவனைப் பிடிக்க முடியவில்லை. எனவே, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மதீனாவுக்குத் திரும்பி வந்து விட்டார்கள். பத்ர் மைதானத்துக்கு ஒருபுறம் உள்ள ஸஃப்வான் எனும் இடம் வரை முஸ்லிம்களின் படை சென்றது. எனவே, இது முதல் பத்ர் யுத்தம் எனப்படுகிறது.

குர்ஸ் பின் ஜாபிர் பற்றி **ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள்** விளக்கம் எழுதி இருக்கிறார்கள். அவர்கள் **கூறுகிறார்கள்:**

குர்ஸ் பின் ஜாபிர் தொடுத்த இந்தத் தாக்குதல் ஒரு சாதாரண காட்டுவாழ் மக்களின் கொள்ளை அடித்தலாக இருக்கவில்லை. மாறாக, நிச்சயமாக அவன் குறைஷிகள் தரப்பிலிருந்து முஸ்லிம்களுக்கு எதிராக ஒரு குறிப்பிட்ட எண்ணத்துடன் வந்திருந்தான். இன்னும் கூறுவதாயின், குறிப்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இழப்பை ஏற்படுத்துவது அவனது எண்ணமாக இருந்திருக்கலாம். ஆனால், முஸ்லிம்கள் விழிப்புணர்வுடன் இருக்கக் கண்டு, அவன் அவர்களின் ஒட்டகங்களைக் களவாடிச் சென்று விட்டான். மக்கத்து குறைஷியர்கள் மதீனாவின் மீது தாக்குதல் தொடுத்து, முஸ்லிம்களை அழித்து நாசமாக்கி விட வேண்டும் என்று எண்ணம் கொண்டு விட்டிருந்தனர் என்பது, இதிலிருந்து தெளிவாகத் தெரிய வருகிறது.

இதையும் நினைவிற் கொள்ள வேண்டும்! அதற்கு முன் முஸ்லிம்களுக்கு வாளால் போர் புரிவதற்கு அனுமதி கிடைத்து விட்டிருந்ததுதான். அவர்கள் சுய பாதுகாப்புக் கண்ணோட்டத்தில், அது தொடர்பான ஆரம்ப நடவடிக்கைகளையும் எடுக்க ஆரம்பித்து விட்டிருந்தார்கள்தான். ஆனால், நடைமுறையில், அதுவரை அவர்கள் தரப்பிலிருந்து நிராகரிப்பாளர்களுக்கு எவ்வித பொருள் இழப்போ அல்லது உயிரிழப்போ ஏற்பட்டிருக்கவில்லை. ஆனால், குர்ஸ் பின் ஜாபிரின் தாக்குதலால், நடைமுறையில், முஸ்லிம்களுக்கு இழப்பு ஏற்பட்டது. ஆக, முஸ்லிம்கள் தரப்பிலிருந்து குறைஷிகளின் சவாலை ஏற்றுக்கொண்டு விட்டிருந்த பிறகும், நடைமுறைப்போரில் நிராகரிப்பாளர்களே முந்திக் கொண்டிருந்தனர்.

அடுத்து, **அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் (ரலி) அவர்களின் தலைமையில்** மக்காவுக்கு அருகிலுள்ள **'நக்லா' எனும் இடத்திற்கு அனுப்பப்பட்ட படைப் பிரிவு** ஆகும். இது தொடர்பாக எழுதப்பட்டுள்ளது:

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ரஜப் மாதத்தில் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் (ரலி) அவர்களை எட்டு முஹாஜிர்களுடன் அனுப்பி வைத்தார்கள். ஹஸ்ரத் சஃது பின் அபீவக்காஸ் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் உத்பா பின் ஃகஸ்வான் (ரலி) அவர்கள் ஆகிய இருவரின் ஒட்டகம் தொலைந்து விட்டது. அதைத் தேடுவதில் அவர்கள் இருவரும் பின்தங்கி இருந்து விட்டார்கள். மற்ற அனைவரும் 'நக்லா' எனும் இடத்தைச் சென்றடைந்தார்கள். அங்கு மக்கத்து குறைஷிகள் முஸ்லிம்களைப் பார்த்ததும் பயந்து போயினர். அது புனித மாதங்களில் ஒன்றான ரஜப் மாதத்தின் கடைசி நாளாக இருந்தது. முஸ்லிம்கள், 'நாம் இவர்களை விட்டுவிட்டால் இவர்கள் கை நழுவிச் சென்று விடுவார்கள்' என்று ஆலோசனை செய்தார்கள்.

எனவே, குறைஷிகள் மீது தாக்குதல் தொடுத்து விட்டார்கள். மேலும், அவர்களின் ஒரு தலைவன் அம்ர் பின் ஹஸ்ரமீயைக் கொன்று விட்டார்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் (ரலி) அவர்கள் இரண்டு கைதிகளையும் அழைத்துக் கொண்டு, ஒட்டகங்களையும் ஓட்டிக் கொண்டு மதீனாவில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வந்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், 'நான் புனித மாதத்தில் போர்புரிய உமக்குக் கட்டளை ஒன்றும் இடவில்லையே!' என்று கூறி, எதையும் ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டார்கள்.

**அல்லாஹ் புனித மாதத்தில் செய்யப்பட்ட இந்தத் தாக்குதல் விஷயத்தில், முஸ்லிம்களின் மனநிறைவுக்காக சூரா அல்பகராவின் 218 ஆவது வசனத்தை வஹீயாக இறக்கினான்.** இதனால் முஸ்லிம்களுக்கு மனநிறைவும் திருப்தியும் ஏற்பட்ட அதே வேளையில், குறைஷியர்களும் ஓரளவு தணிந்து விட்டனர். ஏனென்றால், வஹீ வந்துள்ளது என்று அவர்களுக்குத் தெரிந்து விட்டது. இதற்குப் பிறகு, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் சஃது பின் அபீவக்காஸ் (ரலி) அவர்களும், ஹஸ்ரத் உத்பா பின் ஃகஸ்வான் (ரலி) அவர்களும் பாதுகாப்பாக திரும்பி வந்த பிறகு, ஈட்டுத் தொகையைப் பெற்று விட்டு, குறைஷிகளின் இரு கைதிகளையும் விடுவித்து விட்டார்கள்.

அடுத்து, **பெரிய பத்ர் யுத்தம்.** திருக்குர்ஆனில் இதை யவ்முல் ஃபுர்(க்)கான் என்று கூறப்பட்டுள்ளது.

**ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கான ஃபுர்(க்)கான் (உண்மைக்கும் பொய்க்கும் இடையிலான வித்தியாசம் ஏற்படுதல்) பத்ர் யுத்தம் அன்று இருந்தது. அன்று எதிரிகளின் மிகவும் வலுவான ஆற்றல் கொண்டிருந்த தலைவர்கள் அழிந்து போனார்கள். முஸ்லிம்களுக்கு வெற்றியும் ஆதிக்கமும் கிடைத்தது. ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் பிறிதோரிடத்தில் ஃபுர்(க்)கான் என்ற சொல்லின் பொருளை எடுத்துரைத்தவாறு கூறுகிறார்கள்:

இந்த சொல்லுக்கு இந்தப் பொருள் இருப்பது எனக்குத் திருக்குர்ஆனில் இருந்து தெரிய வந்துள்ளது. அதாவது, எந்த வெற்றிற்குப் பிறகு எதிரியின் முதுகெலும்பு உடைந்து போய் விடுகிறதோ அந்த வெற்றிக்குப் பெயர்தான் ஃபுர்(க்)கான் என்பதாகும். இது பத்ர் நாளன்று நடைபெற்றது. இந்த யுத்தம் இரண்டாவது பத்ர் யுத்தம், பெரிய பத்ர் யுத்தம், மாபெரும் பத்ர் யுத்தம் மற்றும் பழிவாங்கும் பத்ர் யுத்தம் என்றும் கூறப்படுகிறது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இவ்வாறு தகவல் கிடைத்தது: 'அபூ ஸுஃப்யான் குறைஷியர்களின் ஒரு வணிகக் குழுவை அழைத்துக் கொண்டு திரும்பி வந்து கொண்டிருக்கிறார். அதில் ஆயிரம் ஒட்டகங்கள் இருக்கின்றன. அதில் குறைஷிகளின் மிகப் பெரும் மூலதனம் இருந்தது. 30, 40 அல்லது 70 பேர் இருந்தனர். இந்த வணிகக் குழுவை விரட்டிப் பிடிக்கத்தான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் முன்னரும் சென்றிருந்தார்கள்.

இந்தத் திட்டத்திற்காக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரீ இரண்டாம் ஆண்டு ஜமாதில் ஊலா அல்லது ஜமாதில் உக்ரா மாதத்தில் புறப்பட்டார்கள். **முஸ்லிம்கள் செல்வங்களை அபகரிப்பதற்காக இந்தப் படைப் பிரிவு சென்றதாக சில குறைமதி மக்கள் ஆட்சேபனை செய்கிறார்கள். ஆனால், ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் 'சீரத் காத்தமுன் நபிய்யீன்' நூலில் எடுத்துரைக்கிறார்கள்:**

இந்த வணிகக் குழுவைத் தடுத்து நிறுத்த புறப்பட்டது, ஒருபோதும் ஆட்சேபனைக்குரியதல்ல. ஏனென்றால், இது அசாதாரணமான வணிகக் குழுவாக இருந்தது. இதன் லாபம் முஸ்லிம்களுக்கு எதிராக பயன்பட இருந்தது. எனவே, இதில் வந்த லாபம் உஹது போருக்கான ஆயத்தத்தில் செலவிடப்பட்டது என்பது வரலாற்றிலிருந்து நிரூபணமாகிறது. எனவே, இந்த வணிகக் குழுவைத் தடுத்து நிறுத்துவது போர்த் திட்டங்களின் முக்கிய பங்காக இருந்தது.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இந்த வணிகக் குழுவைப் பற்றிய செய்திகளை எட்ட வைப்பதற்காக ஹஸ்ரத் தல்ஹா பின் உபைதில்லாஹ் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் ஸயீது பின் ஸைது (ரலி) அவர்கள் ஆகிய இருவரையும் முன்னால் அனுப்பி வைத்தார்கள். அபூ ஸுஃப்யானுக்கு, 'ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நபித்தோழர்களை உடன் அழைத்துக் கொண்டு இந்த வணிகக் குழுவின் மீது தாக்குதல் தொடுப்பதற்காகப் புறப்பட்டு விட்டார்கள்' என்ற தகவல் கிடைத்தது. இந்தச் செய்தியைக் கேட்டு அவர் மிகவும் அச்சம் அடைந்தார். தனது ஒற்றன் ஒருவனிடம் மக்காவுக்குச் சென்று இந்த செய்தியைத்

தெரிவிக்குமாறு கூறிவிட்டு, அபூஸுஃப்யான் பத்ர் மைதானத்தை ஒருபுறம் விட்டவாறு வேகமாக முன்நோக்கிச் சென்று விட்டார்.

**இது குறித்து, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தந்தையின் சகோதரி ஆதிக்கா பின்த் அப்தில் முத்தலிபின் ஒரு வியத்தகு கனவு இருக்கிறது. அது பின்னர் உண்மையானதாக நிரூபணமானது.** அபூஸுஃப்யானின் ஒற்றன் மக்கா வந்தடைவதற்கு 3 இரவுகளுக்கு முன்பு இவர் இவ்வாறு கனவு பார்த்தார்: ஒரு நபர் ஒட்டகத்தின் மீது பயணித்தவாறு அப்தஹ் மைதானத்தில் இருக்கிறார். பிறகு, கஅபா ஆலயத்தின் தளத்தின் மீது நிற்கிறார். பிறகு, அபூகுபைஸ் மலையின் உச்சியில் நின்று கொண்டு, உரத்த குரலில் மக்களை மூன்று நாள்களுக்குள் தங்களது கொலைக் களத்துக்குச் சென்றுவிடுமாறு கூறுகிறார். பிறகு, அவர் அந்த மலையிலிருந்து ஒரு பாறையைக் கீழே உருட்டி விடுகிறார். கீழே வந்தடைந்ததும் அந்தப் பாறை துண்டு துண்டாக ஆகிறது. மக்காவின் வீடுகளில், அந்தப் பாறையின் ஒரு துண்டு செல்லாத எந்த வீடும் எஞ்சியிருக்கவில்லை.

அவர் இந்தக் கனவைத் தம் சகோதரர் ஹஸ்ரத் அப்பாஸ் பின் அப்தில் முத்தலிப் (ரலி) அவர்களிடம் கூறினார். அது பின்னர் பரவி பரவி அபூஜஹ்ல் வரை சென்றடைந்து விட்டது. அப்போது அபூஜஹ்ல், 'நாங்கள் மூன்று நாள்கள் வரை காத்திருக்கிறோம். இதேபோன்று நிகழ்ந்து விட்டால் சரி, இல்லை என்றால், நீங்கள் அரபு நாட்டில் எல்லோரையும் விடப் பெரிய பொய்யர்கள் என்று எழுதி கஅபா ஆலயத்தில் தொங்க விட்டு விடுவோம்' என்று கூறினான்.

இதற்குப் பிறகு, ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் பனூ அப்துல் முத்தலிப் கோத்திரத்துப் பெண்கள் பேசியதன் அடிப்படையில், அபூஜஹ்லைக் கொல்வதற்காக கஅபா ஆலயத்திற்குச் சென்றார்கள். ஆனால், 'முஸ்லிம்களின் தாக்குதலைப் பற்றி மக்கத்தினருக்குத் தெரியப்படுத்துவதற்காக அனுப்பி வைக்கப்பட்டிருந்த, அபூஸுஃப்யானின் அந்த ஒற்றன் பக்கம் அவர்களின் கவனம் சென்றது. அவன் அபூஸுஃப்யானின் வியாபாரக் குழுவைக் காப்பாற்றுவதற்காக ஆங்காங்கே அறிவிப்பு செய்து கொண்டிருந்தான். குறைஷிகளோ ஏற்கனவே போருக்கு சாக்குப்போக்குத் தேடிக் கொண்டிருந்தனர். இந்த அறிவிப்பால் அவர்களுக்குத் தேவைப்பட்ட காரணம் கிடைத்து விட்டது. எனவே, அவர்கள் போருக்கான முழு ஆயத்தம் மேற்கொள்ள ஆரம்பித்து விட்டார்கள்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: இதன் மேற்கொண்ட விபரம் இனி எடுத்துரைக்கப்படும். இன் ஷா அல்லாஹ்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ

فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِیَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ

بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِی الْقُرْبٰی وَيَنْهٰی عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ

يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)**